தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 25, திருவள்ளுவர் ஆண்டு 2049

2018 ஜூலை 9, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்."

ஒழுக்கம் எல்லோருக்கும் உயர்வைத் தரும். அதனால் அந்த ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிக் காக்க வேண்டும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கோ. கோதண்டராமன் அவர்கள் 8–7–2018 அன்று மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கோ. கோதண்டராமன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் முகையூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 281, மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

281—

மூலிகைப் பூங்கா

***34876—திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதியிலுள்ள சிறுமலை, காந்தமலை மற்றும் அழகர்மலை பகுதிகளில் மூலிகைப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

நத்தம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. ஆண்டி அம்பலம் அவர்கள் நத்தம் தொகுதிக்குட்பட்ட சிறுமலை, காந்தமலை மற்றும் அழகர்மலை ஆகிய பகுதிகளில் மூலிகைப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று வினா எழுப்பியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதிகளுக்கு தனி மூலிகைப் பூங்கா அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*